# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 245 OF 2024** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **பாலகுரு** |
| Father Name | : | **மகாலிங்கம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **38** |

**All accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11.12.2024.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது காங்கேயம் சக்தி நகரில் வசித்து வருகிறேன். நான் 108 ஆம்புலன்ஸில் வேலை செய்து வருகிறேன். கடந்த 01.09.2024ம் தேதி எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மாலை 4 மணி அளவில் எனது சொந்த ஊரான திருச்சிக்கு சென்று விட்டேன். மறுநாள் காலை நான் குடியிருட்டும் வீட்டின் உரிமையாளர் ராஜேந்திரன் எனக்கு காலை 6.00 மணியளவில் போன் செய்து எனது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு இருப்பதாக தெரிவித்தார். தகவல் அறிந்து நான் உடனே வந்து பார்த்தேன். வந்து பார்த்தபோது எனது வீட்டில் எந்த பொருட்களும் களவு போகவில்லை. எனது வீட்டில் பொருட்கள் மட்டும் அங்கும் இங்கும் கலைந்து கிடந்தது. நான்

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2024.12.11 19:08:41 +0530

பக்கத்தில் விசாரித்து பார்த்தபோது எங்களது பக்கத்து வீதியிலும் வீட்டில் களவு போய் இருப்பதாக சொன்னார்கள்.

2. பின்னிட்டு எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நான் மீண்டும் அன்றைய தினமே கிளம்பி திருச்சிக்கு சென்று விட்டேன். மீண்டும் 18.9.2024 ஆம் தேதி வீட்டிற்கு வந்து காவல்துறையிடம் புகார் கொடுத்தேன். சம்பவ இடம் வந்து விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும புகாரியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை நானே எழுதி கையொப்பம் செய்தேன். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது வீட்டில் களவாட முயன்ற நபர்களை பிடித்து விட்டு விட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது வீட்டில் பூட்டு உடைக்கப்பட்டு தொங்கிக் கொண்டிருந்தது. கதவும் திறந்திருந்தது. திருச்சியில் உடல்நிலை சரியில்லாமல் இருந்தேன் என்று காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனது புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்பு தான் நான் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் கதவை சரியாக தாளீட்டு செல்லாத காரணத்தினால் தான் பூட்டு தொங்கியவாறு இருந்தது என்றாலும் நான் சொல்வது போல் எனது வீட்டில் திருட்டு முயற்சி எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

2. நான் சொன்னது போல் எனது வீட்டில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் போலீசார் கேட்டதின் பெயரில் பொய் புகார்

கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாருக்கும் இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

## 3 மற்றும் 4 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

3 மற்றும் 4 ம் எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 245 OF 2024** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | **மனோகரன்** |
| Father Name | : | **சாமியப்பகவுண்டர்** |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **57** |

**All accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11.12.2024.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது காங்கேயத்தில் சக்தி நகரில் வசித்து வருகிறேன். நான் ஜவுளிகடை வைத்துள்ளேன். கடந்த 18.09.2024 ஆம் தேதி மாலை 6.00 மணி அளவில் எனக்குத் தெரிந்த பாலகுரு என்பவரது வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது அங்கு போலீசார் வரைபடம் வரைந்து விவரம் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் சேர்ந்து மகேஷ் என்பவரும் கையொப்பம் செய்தார் **(பார்வை மகஜரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 மற்றும் 2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரில் என்ன இருந்தது என்றால் சம்பவயிடத்திற்கு அருகே உள்ளவற்றை அதில் குறித்து இருந்தார்கள். பாலகுரு எனது எதிர்வீட்டுகாரரர். நான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3 மற்றும் 4 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3 மற்றும் 4 ம் எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)